உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

உ புத்தகம், சஞ்சிகை ௯] ௲அ௱௪உ ௵ வைகாசி ௫, தேயதி வியாழக்கிழமை, Thursday, May 5, 1842 [Vol II No 9

பாண்டிவளநாட்டுச் சரித்திரக் குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

(Continued from page 85)

அரிமர்த்தன்பாண்டியனுக்கும் அவன் பின் பன்னிரண்டாம் பட்டத்துக்கு வந்தவனாகிய கூன்பாண்டியனுக்கும் மத்தியிலே வேறும்பேர்கள் வருகின்றனர். சில பரம்பரைக்கதைகளின் பிரகாரம், கூன்பாண்டியனுடைய காலமானது சாலிவாகனசகாப்தம் (௯௱௫ய) என்றுசொல்லப்படுகின்றது. அது கிறிஸ்தாண்டுக்கு (௲உ௮)ம் வருஷமாகுது. ஆனாலும் இது தப்பிதமென்று பாவிக்கிறதற்குச் சில நியாயங்களிருக்கின்றன. மதுரைப்புராணமும், அதின் மூலமாகிய ஆலாசிய மகாத்துமியமும், கீழேயிருந்த ராசாவின் ராசரீக பரியந்தத்தைச் சொல்லுகின்றது. அந்தப் புராணங்கள் புனைகிறதற்கும், அதிலே இத்தனை சமீபகாலத்திலே உண்மைகளை மறைத்துச்சொன்னால் அவைகள் அபிவிருத்தியாகமாட்டாதேயென்று எவ்வளவும் பாவிக்காமல் அற்புதங்களை உறுதியாய்ச் சொல்லுகிற துணிச்சலுக்கும், மத்தியிலே (உரு) வருஷமாத்திரம் வைத்துக்கொண்டால், (௯௱௭௫ம்)வருஷத்திலே அதிவீரபாண்டியனுடைய ராசாங்கத்திலே அந்தப் புராணங்களுண்டானதாயிருக்கின்றன. ஆகையினாலே அவைகளின் காலமாவது தப்பிதமாயிருக்கும். கூன்பாண்டியனுடைய காலமாவது பிசகாயிருக்கும். ஆனாலும் அந்தக் காலங்களை மிகவும் பிசகாயெழுதியிராதென்று பாவிக்கிறதற்கு அநேக நியாயங்களிருக்கின்றன. எப்படியென்றால் அந்தக்காலத்திலே இவைகளையும் மற்றப் பிரபந்தங்களையுஞ் செய்தவர்கள் சைவக் குருக்களுமாருஞ் சைவ வித்துவான்களுமென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறபடியே அவர்களுடைய பிடிமானம் ஒன்பதாஞ் சதகத்துக்கு உள்ளும் புறம்பும் விசேஷமாய் விருத்தியிருந்ததற்குச் சந்தேகமில்லாதபடியினாலே தான் பின்னும் பாண்டிய சமுஸ்தானத்திலே மதாசாரம் மறுபடியும் வருகிறதற்கு ஞானசம்பந்தரென்கிற ஒரு சைவக்குருக்கள் முக்கியகாரணராயிருந்தார். அவருடைய பிரபந்தங்களும் அவராலே முதலிலே திருந்தினவர்களும் அவருக்குச் சீஷர்களுமாகிய அப்பர் சுந்தரர் என்கிறவர்களுடைய பிரபந்தங்களுந் தக்கணத்திலே நன்றாய் அறியப்பட்டிருந்தவைகளுமல்லாமல், ஒன்பதாஞ் சதகத்திலே உண்டானதாக அயிக்கியகண்டியமாய்ச் சொல்லப்படுகின்றன. அதினாலே கூன்பாண்டியனை அந்தக் காலத்திலேதான் நாம் வைத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. கூன்பாண்டியனைப் பத்திபண்ணின சைனமானது அடுத்த தேசங்களிலே விசுவசத்தில அதிகரித்திருந்த அந்தக் காலத்தைவிட, இந்தக்காலமொத்திருக்கிறபடியினாலே இந்தக்காலமே உறுதிப்படுகிறது.

இந்தராசாவினுடைய காலம் எதுவாயிருந்தாலுமிருக்கட்டும் இவனுடைய ராசரீகத்துக்கு முன்னே பாண்டியதேசத்திலே கொஞ்சங் கனமான இரண்டுகாரியங்கள் சம்பவித்தவைகளாகக் காணுகின்றன. அவைகள் கிறீஸ்தருடைய சாதனங்களில் எதிலேயுஞ் சொல்லியிருக்கின்ற சம்பந்தமாயிராவிட்டாலுஞ் சம்பந்தப்பட்டவைகள்போலக் காணுகின்றன. அவைகளாவன, மதுரைச்சங்கங் கெட்டுப்போனதும், சமணமதம் ஸ்தாபிக்கப்பட்டுப் போனதுந்தான்.

சங்கத்தாரெடுபட்டுப்போனது பழக்கமானஅற்புதகாரியமாகவே சொல்லியிருக்கிறது. அதாவது இந்தப் புலவர்களுடைய சங்கப் பலகையில் உட்காருகிற கனத்தைக் கோரி, (Mylapoor) மயிலாப்பூரிலே பறையர்களுக்குக் குருவாகியும், நீதி நூலாசாரியராயுமிருந்த திருவள்ளுவர் அவ்விடத்துக்குப்போனார். அந்தக் கற்றபுலவர்கள் அவருடைய துணிவைப்பார்த்து மிகவுங் கோபித்தார்கள். ஆனாலும், அவர் அந்தராசாவினாலே அபிமானிக்கப்பட்டவராயிருந்தபடியினாலே அவர்கள் அவர் புத்தகத்தை அதிலே வைத்துச் சோதிக்கிறதற்காவது கட்டாயப்பட்டார்கள். இது நிமித்தம் அந்த மகத்துவமுள்ள பலகையின் பேரிலே அதற்கிடங்கொடுக்கவேண்டியதாயிருந்தபடியினாலே அந்தப் புலவர்கள் அதினிரம்ப உட்கார்ந்துகொள்ளும்படியாகச் சாக்கிரதைப்பட்டார்கள். ஆனபோதைக்கும் அவர்களுக்காச்சரியமுண்டாகும்படியாய் அந்தப் பலகை தானே வளர்ந்து அந்தப் புத்தகத்துக்கிடங்கொடுத்தது. அந்தப் புத்தகமோ தானே வளரத்தொடங்கி அவர்களையெல்லாம் அதினின்று கீழேதள்ளி விடும்படியாய் அவ்வளவு பரவினது. அந்த ராசாவும் மதுரையிலுள்ள பிரசைகளும் இந்த வேடிக்கையைப்பார்த்து அந்தப் புலவர்களுடைய கறுவ பங்கத்துக்குச் சந்தோஷப்பட்டார்கள். அந்தப் புலவர்கள் தங்களுக்கு வந்த அபிமானத்தைத் தெரிந்துகொண்டபடியினாலே அதின் பேரிலே தரிகொள்ளமாட்டாமற் றள்ளுண்டு அடுத்தாப்போலே இருந்த ஒரு குளத்திலே எல்லாரும்முழுகி இறந்துபோனார்கள். அதினாலே அந்தச் சங்கமெடுபட்டுப்போயிற்று.

இப்படி நேரிட்டதை ஒரு கல்வித்திறத்தினாலேயென்று நாம் ஆலோசனைபண்ணுவோமேயாகில நாமதை அறிந்துகொள்ளப் பிரயாசப்படத்தேவையில்லை. மேற்படி கல்விச்சங்கமானது தமிழப்பிரபந்தங்களை விர்த்திபண்ணுகிறதாகவே ஏற்படுத்தினதாகக் காணப்படுகிறபடியால் அதிலிருந்த தலைமைப்புலவர்கள் அந்தப் பிரபந்தங்களிலே சான்றோர்களாயிருந்தார்கள். மேற்படி சங்கத்தார் சமஸ்கிருத பிரபந்தங்களையே நிரம்பவும் பாராட்டிக்கொண்டுவந்து கடைசியிலே தங்கள் சுதேச வித்தையை விட்டுவிட்டார்கள். இப்படி விட்டுவிட்டார்களென்கிறதற்குத் திருட்டாந்தமென்னவென்றால் புதிய தமிழைப்பார்க்கிலும் பழயதமிழே நன்றாயிருக்குதென்றும், ௯ம் சதகத்திலேதானே தமிழ்ப்பாஷை உபயோகமில்லாமற் போய்விடும்படிக்கு விட்டுவிட்டார்களென்றும் அவ்வையார் (Avayar) சொல்லியிருக்கிற குறிப்பினாலே விளங்குகின்றது. ஆகிலும் இது காரியங்களெல்லாந் திருவள்ளுவர் நாளையிலே செவ்வைப்பட்டது. அதெப்படியென்றால், பழையதெல்லாமடிபட்டுப்போய், தமிழ்ப்படிக்கிறதில நூதனமொரு ஊக்கமுண்டாகி, ௯ம் சதகத்துக்குப்பின்னே பாண்டியதேசத்திலேயும், சோழதேசத்திலேயுந் தமிழ்ப்பாஷையிலே சான்றோர்களாய அநேகம் வித்துவான்களுண்டானார்கள்.

[இன்னும் வரும்]

Life of Mohammed —மகமதுவின் சரித்திரம்

௯ அதிகாரம்.

(The Koreish exasperated and alarmed by Mohammed's growing success—Commence persecution—Some of his followers seek safety in flight—New converts—The Koreish form a League against him—Abu Taleb and Cadyah die—He makes a temporary retreat from Mecca—Returns and preaches with increased zeal—Some of the Pilgrims from Medina converted)

(மகமது மதப்பிரபலிய விருத்தாந்தம்.)

மகமதுநபி அதிகவேகங்கொண்டு உற்சாகமனத்துடன் தன்னுடைய நவமதத்தை எங்கும் பிரபலியப்படுத்தி அநேகம்பேரைத் தன்னுடைய மதத்துக்கநுசாரிகளாய் வரும்படி செய்ததினால கோறிஸவங்கிஷத்ததிகாரிகளெல்லாரும் மெங்கிப் பயந்து மகமதுவைக்கொன்றுபோட யோசனைபண்ணினதினால் அவர் தன்னுடைய சிறிய பிதாவாகிய (Abu Taleb) அபூதாலெப் என்பவரிடத்தில அடைக்கலம்புகுந்து தப்பிக்கொள்ள நினைத்ததருணத்திற் சனங்கள் எல்லாரும் அபூதாலெப் என்பவரைப் பயமுறுத்திச் சொன்னது "நீர் மகமதுவுக்குப் புதுதசொல்லி மதத்தைப் பரப்புகிறதைவிட்டோயும்படி அவனுக்குப் புத்தி போதனை சொல்லாவிட்டால் உம்முடனே போர் பொரும்படி படையெடுப்போமென்றார்கள்" இத்தை அபூதாலப் என்பவர் மகமதுவுக்குச் சொன்னவேளையில மகமது சற்றேனுந் தைரியவீனப்படாமற் சொன்னது "தன்சத்துருக்களெல்லாருங் கூடி ஏகமாய்த்திரண்டு படையோடுயுத்தம்பண்ணிச் சூரியனையெடுத்துத் தன் வலக்கரத்திலுஞ் சந்திரனையெடுத்துத் தன்னிடக்கரத்திலும் வைத்தாலும் நானெடுத்த எடுப்பையும் பிடித்த பிடியையும் விடமாட்டேன்" என்றுசொன்னார் இத்

தை அபூதாலப் என்பவர் கேட்டு என்னதான் வந்தாலுந் தான் மகமதுவுக்குச் சகாயனாயிருப்பேனென்று பிரமாணித்துச் சாகுமளவும் அவரை விலக்கிக் காத்துக்கொண்டார். ஆனாலும் இவர் மகமது மதத்திற் சேர்ந்தாரோ அல்லவோ தெரியாது.

காரியமிப்படியிருக்கையில் கோறிஸ்வங்கிஷத்தார் மகமது மதானுசாரிகளைத் துன்பப்படுத்த ஆரம்பித்தவேளையில் அவர்கள் மக்காநகரியிலிருந்து காலங்கழிக்கக்கூடாமையால் அவர்களெங்கேயாகிலும் ஓடிப்போய் உயிரைக் காக்கும்படி மகமது சகலருக்கும் இடங்கொடுத்தார். உடனே அதிசீக்கிரமாய் மகமது மகளும் அவளுடைய புருஷனும் வேறும் (௰௬) பேரும் அத்துடனே கூட (௮௧) ஆண்சனங்களும் (௰௮) பெண்சனங்களுமாக (Ethiopia) எத்தியோப்பியராசாவிடத்திற் போய் அடைக்கலம் புகுந்ததினால் அவ்விராசா இவர்களை உபசாரணையுடனேற்றுக்கொண்டு, கோறிஸ்வங்கிஷத்தார் தானாபதிகளையனுப்பி இவர்களை விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது விடமாட்டேனென்று சொன்னார். இப்படியே மார்க்கவனாசனியை நிலைநிறுத்தும் பொருட்டோடிப்போனவர்களைப் பற்றி மகமதுநபி சொல்லுகிறதென்னவெனில், "பராபரனுடைய நிமித்தமாகத் தங்கள் தேசத்தை விட்டோடிப்போனவர்களுக்கோ இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் வரப்பட்ட பலன் சொல்லிமுடியாது." வீரவானும் தைரிய பராக்கிரமசாலியுமாயிருந்த காம்சா (Hamza) என்ற மகமதுவுடைய சிறிய தகப்பனும் (Omza) ஓம்சா என்பவரும் மகமது மதானுசாரிகளாய் வந்துவிட்டதினால் கோறிஸ்வங்கிஷத்தார் முன்கொண்டதிலும் அதிக முனிவுகொண்டு மகமதுமதானுசாரிகளைக் கண்டு கேட்டவிடமெல்லாம் பகைத்துக் கொடுமைசெய்தார்கள். துன்பப்படுத்தலெவ்வளவுக்கதிகரித்ததோ அவ்வளவுக் கதிகமாக மகமது மதமேறும் பரம்பினதினால் கோறிஸ்வங்கிஷத்தார் வெறிகொண்டு மருளடைந்து காசேமியருக்கு (Hashamites) விரோதமாகப் பண்ணின பொருத்தனையென்னவென்றால் "இனிமேல் காசேமியருடனே பிரதானமாய (Motall_b) மோத்தாலேப் என்பவருடைய வங்கிஷத்தாருடனே எவ்விதமான கூட்டுறவாகுதல் பண்ணப்படாதென்றெழுதிக் கேயபா (Caaba) என்ற கோவிலிலே வைத்தார்கள். அதினால் அவ்வங்கிஷம் இரண்டுகாயப் பிரிந்து அதிலொன்று அபூதாலேப் என்பவருக்குக் கீழாகவும், மற்றது (Abu Sophyan) அபூசோபியனென்பவருக்குக் கீழாகவுமிருந்தார்கள். அபூதாலேப் என்பவரோ மக்காநகரிக்கதிபதியானதினால் அவர்கள் பண்ணின பொருத்தனைகளொன்றுக்கும் உதவாமற்போய்விட்டது. மகமதுநபி தன் மதத்தைப் பிரபலியப்படுத்தவாரம்பித்த (௭ம்) வருடத்தில் அபூதாலேப் என்பவரும் கொஞ்சநாளையிற்பிறகு நபியினுடைய பெண்சாதியாகிய (Cadijah) என்பவளும் காலஞ்சென்றுபோனார்கள். அதைப்பற்றி நபி சொல்லுகிறதென்னவெனில் "புருடர்களுக்குள்ளே பூரணசற்குணரிருந்தார்கள், ஆனாலும் பெண்களுக்குள்ளே (௪) பேர் மாத்திரம் பூரண சற்குணராயிருக்கிறார்கள். அவர்களாரெனில், நபியினுடைய பெண்சாதி கதீசா என்பவளும், அவருடைய குமாரத்தியாகிய பறிமா (Fatima) என்பவளும், பாரோவானின் (Pharoah) பெண்சாதியாகிய ஆசியா (Asia) என்பவளும், இமறுவின் (Imram) குமாரத்தியும் மோசே என்பவரின் சகோதரியுமாகிய மரியாள் (Mary or Miriam) என்பவர்களுமே."

மகமதுநபி ஒருமுறை தன் தாயுடைய கல்லறையில் நின்றழுது சொன்னதாகச் சொல்லியிருக்கிறதென்னவெனில் "நானென்னுடைய தாயின் சமாதியைப் பார்த்துவரும்படி பராபரனிடத்தில் உத்தரவு கேட்டேன், அவர் உத்தரங்கொடுத்தார். அவளுக்காகச் செபம்பண்ணச் சொல்லி அவரிடத்திற் கேட்டபொழுது அவர் மாட்டேனென்றுவிட்டார்." துன்பப்படுத்தல் நிமித்தம் அநேகம்பேர் மகமதுமதத்தை விட்டுவிட்டார்கள். இப்படி நாளுக்கு நாள் அதிகம் நெருக்கினதினால் மகமதுநபியொழித்தோடி மக்காநகரிக்குக் கிழக்கே (௯௰) மயில் தூரத்துக்கப்பாலிருக்கிற (Tayef) தேயெவ் என்ற கிராமத்துக்குப் போய் அவ்விடத்திற் தன் சிறிய தகப்பனாகிய (Abbas) அப்பாஸ் என்பவரை அண்டிக்கொண்டு கொஞ்சநாட்கழித்தபிறகு (Caaba) கேயோபா என்ற கோவிலுக்கு யாத்திரை பண்ணிவந்த சனங்களுக்கு (Islam) இஸ்லாம் மதத்தைப் பிரசங்கம் பண்ணி அநேகரை மதத்துக்குட்படுத்தினார். இவர்களில் (௬) பேர் (Yatreb) யேத்திறப் என்று பேர்கொண்ட மெத்தினாநகரிக்குச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். இவ்வேளையில் மகமதுநபி தன் காரியத்தை நிலைப்படுத்தும்படி (Abubeker) அபூபீக்கர் என்பவருடைய மகளாகிய ஆயசா (Ayesha) என்பவளையும், கொஞ்சநாளையிற்பிறகு (Zama) சாமா என்பவருடைய மகளாகிய (Sawda) சோடா என்பவளையும் விவாகம்பண்ணி மக்காநகரியில் முதற்றரமான ஆட்களுக்கு மைத்துனனாய் வந்தபடியால் இவருடைய மதமெங்கும் ஸ்திரப்படவேண்டியதாயிருந்தது.

தென்சமுத்திரத் தீவில் நடந்த சங்கதி

(From William's Missionary Enterprises in the South Seas.)

[௯௫ம் பக்கத்தினின்று]

மற்ற ஒய்வுநாளிலே இவ்விடத்தில் (௪௩) சனங்கள் கூடினார்கள். அங்கேயிருந்த கோவிலில் எல்லாருமிருக்கக்கூடாததினாற் பாதிப்பேர் கோவிலுக்குள்ளும் பாதிப்பேர் வெளியிலும் நின்றார்கள். சனங்களிருக்க இடமில்லாததை நாங்கள் கண்டபொழுது பிரதானிகளும் நாங்களும் ஒரு பெரிய கோவிலைக் கட்டும்படி யோசனை பண்ணினோம். இதற்கு வேண்டிய தட்டுமுட்டுகளையெல்லாஞ் சம்பாதித்ததின்மேல் அந்தச் சனங்களுடைய சுறுசுறுப்பினாலே (௯௫) முழ நீளமும், (௨௯) முழ அகலமுமான ஒரு பெரிய கோவிலைக் கட்டிமுடித்தோம். இதிலே ஏறக்குறைய (௫௲)ம் பேர் கூடத்தக்கதாயிருக்கும்.

இந்தக் கோவில் வேலை நடக்கிற காலத்திலே ஒரு அற்புதமான காரியஞ் சம்பவித்தது. அதென்னவானால் நான் தச்சவேலை செய்கிற இடத்துக்கு வருகையில் மட்டப்பலகையைக் கொண்டுவராமல் மறந்துபோய் வந்துவிட்டேன். அப்பொழுது வீட்டிலிருந்த என்னுடைய மனைவி என் ஆயுதப்பெட்டியைத் திறந்து அதிலிருக்கிற மட்டப் பலகையை எனக்கு அனுப்பும்படி ஒரு பலகைத்துண்டிலே கரிக்கட்டியாலெழுதி வேலைசெய்வித்துக்கொண்டிருக்கிற முதலாளிகளிலொருவனை அழைத்து இந்தப் பலகைத்துண்டை (உவில்லியம்) அம்மாள் வசமாய்க்கொடுத்து வரவேண்டுமென்று சொன்னேன். அவனோ மாறுத்தரமாக நானிந்தச் சிராயத்துண்டை அங்கே கொண்டுபோனால் என்னைப் பயித்தியக்காரனென்று சொல்லிக் கோபித்துக்கொள்வாள், ஆதலால் அதை நீர்தானே வைத்துக்கொள்ளுமென்றான். அதற்கு நான் அப்படியல்ல, மிகவும் அவசரமாயிருக்கிறது, அதைச் சீக்கிரமாய்க் கொண்டுபோ, அவள் உன்னுடனே [illegible]. இப்படி நான் மிகவும் அவசரப்படுத்தினதைக் கண்டு அவன் "இதை நான் அங்கே கொண்டுபோய் என்ன சொல்லவேண்டுமென்றான். அதற்கு நான் நீ ஒன்றுஞ் சொல்லத் தேவையில்லை, நான் சொல்லவேண்டியதெல்லாம் அந்தப் பலகை சொல்லுமென்றேன். அவன் அதிலெழுதியிருக்கிற குறிப்பை அல்லது சாரத்தை அறியாதவனானபடியினாலே அந்தச் சிராயைக் கையிலே பிடித்துக்கொண்டு பகிடியாய் அது பேசவாயிருக்குதாவென்றான். அதைக்குறித்துத் தருக்கித்துக்கொண்டிருக்க நேரம்போகிறபடியினாலே நீ இனிப் பேசாமற் சீக்கிரமாய் அதைக்கொண்டுபோய்க் கொடுவென்று சொன்னேன், அதை அவன் கொண்டுபோய் அந்த அம்மாளிடத்திற் கொடுத்தான். அவள் அதை வாசித்தபின்பு சிராயை வெளியிலேயெறிந்துபோட்டுப் பெட்டியைத் திறந்து அந்த மட்டப் பலகையை எடுத்துக்கொடுக்கப்போனபொழுது இந்த முதலாளியும் அதிசயத்துடனே அந்த அம்மாள் போகிற இடமாய் [illegible] அவள் போகிற முகாந்திரமதென்னென்றறியும்படி தொடர்ந்துபோனான். அப்பொழுது அம்மாள் பெட்டியைத் திறந்து மட்டப்பலகையைத் தூக்கிக் கையிற்கொடுக்க அவன் அதிசயப்பட்டு அம்மாளைப் பார்த்து அம்மா, இந்தப் பொருள்தான் வில்லியம் என்பவர் கேட்டனுப்பியிருக்கிறாரென்பதை நீ எப்படி அறிந்தாயென்று கேட்டான், அவள் இந்த முதியவனைப் பார்த்து நீ இப்பொழுது என்னிடத்தில் ஒரு சிராயைக் கொண்டுவரவில்லையாவென்று கேட்க, அவன் நான் கொண்டுவந்ததுமெய்தான், ஆனாலும் அந்தச் சிராய் உமக்கு ஒன்றையுஞ் சொல்லவில்லையேயென்றான், அதற்கவள் அது சொல்லாதிருந்தும் நான் கேட்டிருக்கிறேன், அதின் மூலமாகவே அதை அனுப்பினவருக்கு இன்னது தேவையாயிருந்ததென்றறிந்தேனென்றாள். ஆகையால் தாமதம்பண்ணாமற் கொண்டோடிப்போய்க் கொடுவென்று சொல்ல அவன் மட்டப்பலகையை ஒரு கையிலும், அந்தச் சிராயத்துண்டை மற்றக் கையிலும் பிடித்துத் தெருவீதிகளுக்கூடாயோடி இங்கிலீஷ்காரருடைய புத்தியைப் பாருங்கள், சிராயத்துண்டுகளுக்குக்கூட அவர்கள் பேசப்பழக்கக்கூடியவர்களாயிருக்கிறார்களென்று சந்தோஷித்துடனே என்னிடத்தில் வந்து அந்த மட்டப்பலகையை ஒப்புவித்ததின்மேல் ஐயா, நீங்கள் ஆ

...த்திலிருக்கிறவர்களுடனே இந்தச் சிராய்த்துண்டுவழியாய்ப் பேசிக்கொள்வது எப்படியென்று விசாரணைபண்ணினான். நானும் என்னாற்கூடியளவு அவனுக்கு விளங்கப்பண்ணி அவன் விளங்கிக்கொண்டாலும் அவன் அந்தச் சிராயத்துண்டைப் பூதனத்தினாலே மதிப்புக்கொண்டு அதை வெகுநாளாகத் தன் கழுத்திலே ஒரு கயிற்றினாலே கட்டித் தூக்கிக்கொண்டான். இதைக் கண்டவர்களெல்லாருஞ் சில மாதமாக அவனைக் கண்ட தருணங்களிலே வளைந்துநின்று இவன் அதைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்ல அவர்களுமோ ஆவலாய்க் கேட்டுக்கொண்டு நிற்பார்கள்.

ஒருநாள் நானும் என் கூட்டாளியாகிய பிற்றுமனும் கோவில் வேலைசெய்விக்கிற இடத்திலே நின்றபொழுது அவர்கள் ஒரு கைமரத்தைத் தூக்கி உயரவேற்றுகையில் அது வழுவி (பிற்றுமன்) என்பவருடைய தலையில் விழுந்ததினாலே அறிவுகெட்டுச் செத்துப்போனவர்போற்கிடந்தார். நாங்கள் ஓடிப்போய் அவரைத் தூக்கியெடுத்துக் காயத்தை ஆராய்ந்துபார்த்தவிடத்தில் எலும்புகளுக்குப் பழுதில்லாததினாலே உடனே மருந்துகட்டினோம். கர்த்தருடைய கிருபையினாற் கொஞ்சநாளைக்குள்ளே சுகமடைந்து மறுபடியுங் கடவுளுடைய வேலையைப் பராமரித்து வந்தார்.

இந்தத் தீவார் அறிவிலே தேறும்படி நாங்கள் அவர்கள் பாஷையிலே எழுத்துண்டாக்கிப் புத்தகங்களைப் பரம்பப்பண்ணிப் புதிய வேற்பாட்டிலுள்ள யோவானுடைய சுவிசேஷத்தையுங் கலாத்தியருக்கெழுதின நிருபத்தையும் அந்தப் பாஷையிலே அச்சுப்போடுவித்துக்கொடுத்தோம். இத்தீவு விஸ்தாரமும் அதின் குடிசனங்கள் மிகுதியுமாயிருந்ததினாலே புதிதாகக் கட்டின கோவிலிலே ஒரு குருவும் உபதேசிகளுமிருக்கவும், முந்தின பழைய கோவிலைப் புதுப்பித்து அதிலொரு குருவும் அதற்கடுத்த உதவிக்காரரும் அங்கேயிருக்கவும், யோசனைபண்ணிக்கொண்டு அதற்கடுத்தவொழுங்குபண்ணினோம். இவ்விதமாக நாங்கள் அங்கங்கேயிருக்கிறதற்கு வீடுவாசல்கட்டி வசதிபண்ணினபின்பு சனங்களுக்கு அறிவைப்போதிக்கத்தொடங்கினோம். யாவரும் எங்களிடத்தில் வந்து நலவிருப்பத்தோடே கேட்பார்கள். ஓய்வுநாட்டோறும் இந்தத் தீவிற்சனங்கள் தாங்கள் தேவாராதனைக்குப் போகவேண்டிய கோவில்களுக்குப் போய் அங்கே பிரசங்கந் தொடங்குமுன்னாக எட்டுமணிவரைக்குந் தாங்களாய்க் கூடிச் செபக்கூட்டம் வைப்பார்கள். பிரசங்கம் முடிந்த பின்பு அந்தக் குருவினிடத்திலே போய் அவர் அவ்வேளைக்குப் பண்ணின பிரசங்கத்தைக் குறித்து ஒரு மணித்தியாலம் வரைக்குங் கெட்டியாய் விசாரணைபண்ணித் தங்கள் மனதிலே வைத்துக்கொள்வார்கள். மேலும் இன்னின்னதற்கு முகவுரை வசனங்களையும், இன்னின்ன பிரசங்கத்தின் முகவுரையிலே சொல்லப்படுங் காரியங்களையும், இன்னின்ன பிரசங்கத்தின் நடுப்பகுதிகளையும், இன்னின்ன பிரசங்கத்தின் கடைப்பகுதியையும், இன்னின்ன ஒத்துவாக்கியங்களையும் நினைத்துக்கொள்ளவேண்டுமென்று ஒருவரோடொருவர் பிரசங்கத்துக்குப் போகுமுன்னதாகப் பேசிக்கொண்டு பிரசங்கத்தின் பின்பு வந்து ஒருவரை ஒருவர் வினவுகிற பழக்கமும் இவர்களுக்குள் வாடிக்கையாயிருந்தது.

[இன்னும் வரும்.]

THE HISTORY OF CHRISTIANITY IN CEYLON

(Translated from the "Friend")

(Continued from page 74)

இலங்கைத் தீபககிறிஸ்துசமயோற்பவ விருத்தாந்தம்

(௲௫௱௪௨) ஆண்டு பிறஞ்சி சவியேல் (Francis Xavier) என்னும் ஒரு பெரிய போதகர் கோவைக்கு வந்து பிறகு செ[illegible]கரம் மதுராபுரி முதலிய பேர்போந்த தலங்களுக்குப்போனார். இவரெழுதிவைத்த சில புத்தகங்களில் நாம் காண்கிறதென்னவெனில் "நான் கையிலே என்னுடைய மணியையும் பிடித்து எனக்ககப்படுகிற சகலரையுஞ் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தையும் போதித்தேன்" (இந்தச் சவியேல் போதகருக்குச் சிலர் இரண்டாம் பவுல் அப்போஸ்தலனெனப் பேர்சூட்டியிருக்கிறார்கள். இவர் பண்ணின மூன்றாம் பிரயாணத்திலே மன்னாரிலிருந்த கிறிஸ்தவர்களைக்கண்டு சந்தித்து மகிழ்ச்சியடைந்தார். இவ்விடத்திலிருந்த பரவரில் (Paravas) அநேகர் கிறிஸ்துமதத்தைத் தழுவிக்கொண்டார்களென்பதை (Jaffna) யாழ்ப்பாணநாட்டை அரசாண்ட அதிபதி கேள்விப்பட்டபொழுது கொஞ்சப்பேரைப் பட்டயத்துக் கிரையாக்கவுங் கொஞ்சப்பேரைக் கழுவிலேற்றவுந் தீர்மானித்தான். இவ்விதமாகவே அநேக கிறிஸ்தவர்கள் மரணவுபாதியையடைந்தார்கள். உடனே உண்டானகட்டளை நிருபித்ததென்னவென்றால் "இந்து மத ஆசாரியகுருமாரைத்தவிர வேறொருபிரமதத்தாரும் இத்தீவுக்குக் கால் மிதிக்கப்படாதென்றும், அப்படியாராகுதல் மிதித்ததுண்டானாற் சகலரும் ஆக்கினையடைவார்களென்றுந்தான்." இவ்விதமான கொடூரகட்டளைவந்தாலுங் கிறிஸ்துமதமோ எங்கும் பரம்பிவந்தது. எப்படியெனில் இக்கட்டளை நிருபித்தலையுண்டுபண்ணின ராசாவின் வீட்டு வேலைகாரருங் கோட்டுவேலைகாரரும் ஞானஸ்நானம்பெற்றுச் சபையிலுஞ்சேர்ந்ததுமல்லாமல் அவ்விராசனுடைய புத்திரனுங் கிறிஸ்து சபையிற் சேர்ந்துவிட்டான். உடனே அந்தப் பொல்லாத ராசா தன் மகனைச் சற்றெனகிலும் இரக்கமில்லாமற் கொன்றுபோட்டான்.

(௲௫௱௪௮) ஆண்டு சவியேல் என்பவர் யாழ்ப்பாணத்துக்குவந்து இவ்விடத்திலிருந்த ராசாவை முகமுகமாய்க் கண்டு அவருடனே சில பிரதான காரியங்களைப் பற்றிப் பேசிப் பறங்கிக்காரருடனே சந்தோஷமாயிருக்கவும் அவர்களுடைய போர்ச்சேவகரைப் பிடித்துக்கொள்ளவும் அவரை வேண்டிக்கொண்டார். பிறகு சவியேல் (Ramasseram) இராமேசுரத்துக்குப் போனபொழுது அவ்விடத்திலே அவரைக் கிட்டத்தானுமணுகவிடாமற் தூரநிற்கும்படி மறித்தபொழுது அவர் அகலநின்று பண்ணின பிரசங்கமாவது. "பொல்லாத சனங்களே, சீவியபராபரனிடத்துக்குத் திரும்புங்கள்" என்பதே. இந்தப் போதகரைப்போலத்தானே (Vas) வாஸ் என்ற குருவுங் கிறிஸ்துமதப் பிரபலியத்துக்காக வெகு பிரயாசப்பட்டு இரண்டாஞ் சவியேல் என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

பறங்கிக்காரருடைய ஆளுகை யொழிந்துபோனபொழுது கொழும்பிலே இரண்டு பெரிய கோவில்களும் ஐந்து சிறிதானகோவில்களுங் கட்டப்பட்டன. காலியில் (Galle) ஏறக்குறைய (௲) மெய்க்கிறிஸ்தவர்களிருந்தார்களெனக் கேள்வியுண்டு. கல்ந்துறையிலே (Cultura) ஒரு போதகரும், நீர்கொழும்பில் (Negombo) வேறொருபோதகரும், மட்டக்களப்பில் (Batticaloe) இன்னுமொரு போதகருமாக மூன்று போதகர்களிருந்தார்கள். இனிவருஞ் சரு

சிலைகள் ஒன்றில் யாழ்ப்பாணத்திற் கிறிஸ்துமதம் வந்த விதத்தைப் பற்றிச் சுருக்கமாயெடுத்துக் காட்டுவோம்.

வேதவிசாரணை

Religious Inquiry

சகத்திருணீக்குந் தபனனென்னவேயுளத்திருணீக்குமுதயதாரகையின் முகாமைத்துரைக்கு மகா நன்மை மலருக

உதயதாரகையில் மார்க்கத்தைப் பற்றியும் அச்சடிக்கப்படுமென்ற ஒழுங்குத் திட்டமுண்டுபண்ணிக்கொண்டது முக்கியமான காரியம் ஏனெனில் அதொன்றுமே அத்தை வாசிப்பவர்களுடைய ஆத்துமத்துக்கடுத்த காரியம் ஆகையால், நானும் ஒரு காரியமெழுதி என் மனவறிவு தேறி நல்வழியிற் சேரும்படி துணிந்தேன் என்னவெனில்,

மோசே எழுதின இரண்டாம் ஆகமம், உ௰ அதிகாரம் ரு, சு வசனங்களில் "உன் பராபரனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து நம்மைப் பகைக்கிறவர்களுக்கோவென்றால் பிதாக்களுடைய அவநியாயத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றும் நான்காந் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம். ஆனாலும் நம்மைச் சிநேகித்து நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைமட்டுந் தயவு செய்கிறவராயிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கின்றது இதிற் சொல்லியபடி பிதாக்களுடைய பாவத்துக்காகப் பிள்ளைகளிடத்திற் பராபரன் பழிவாங்கினால் நான் கிறிஸ்தவனாகவேண்டியதென்னவென்றெண்ணம் உண்டாகின்றது ஏனெனில் எனது பிதாக் கிறிஸ்தவனல்லாததினால் நானும் பாவிதான் என் பிள்ளை பேரப்பிள்ளைகளும் பாவிகள்தான், ஆகையால் இப்போ இந்த ஊரிலே கிறிஸ்தவர்களாகிறவர்களுக்கு மோட்சமில்லையென்றெண்ணவேண்டியது அதுவன்றி எனது பிதா அஞ்ஞானியாயும் நான் கிறிஸ்தவனாயுமிருந்தால் என் பிள்ளை என் பிதாவை நோக்கிப் பாவியாகவும் என்னை நோக்கிப் பரிசுத்தவானாகவுமிருப்பான் அப்போ பராபரன் அவன் பேரிற் பழிவாங்குவாரோ? தயவுசெய்வாரோ? அல்லாமலும் ஒருவன் செய்த குற்றத்துக்காக வேறொருவனைக் குற்றவாளியாக்குகிறது அநீதமாய் முடியுமே

"அறிவறியாமையையுறல்கொள்ளல்கொடையேவறருமவினை" என்னுமறுவகைவினையுள் இது, அறியாவினையாகையாலும் இக்காரியம் மற்றக் காரியங்களைப் போல உலக அறிவுக்கடுத்ததல்ல ஆத்தும ஈடேற்றத்துக்கடுத்ததாகையாலுங் கிறிஸ்தமார்க்கத்திற் கனிந்த அறிவையுடையோர் அன்புடனே யோரவிடை எழுதியென்றறியாமையை அகற்றி என்னை நன்மார்க்கத்திலுய்க்கும்படி மிகுந்த தாழ்மையுடன் மன்றாடிக் கேட்கிறேன் இப்படிக்கு

௲அ௱சஉ ஆ பங்குனி மீ உ௰தி
கட்டைவேலி — வேதவினோதன்

கவனிப்பு

"வேதவினோதன்" என்பவர் காட்டிய வசனங்களையும் பின்னாற் சொல்லப்படும் வசனத்தையும் ஒன்றோடொன்று சமரசப்படுத்தி மலைவறுப்பதினால் அவரெழுதிய வசனங்களின் கருத்துந் தெளிவுற விளங்கும் அதாவது, எசேக்கியேல், ௰அ அதி. உ௰ வச. "பாவஞ் செய்கிற ஆத்துமமே சாகும் குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை நீதிமானுடைய நீதி அவன் மேலே தானேயிருக்கும் ஆகாதவனுடைய ஆகாமியமும் அவன்மேலே தானேயிருக்கும்" இந்த வசனத்தினாலே ஒரு மனிதன் தன்னுடைய சொந்த அக்கிரமத்தையேயல்லாமல் மற்றொருவனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதேயில்லை. அப்படியே ஒரு மனிதனுடைய நீதியும் அவனுடைய சொந்தமான பொருளாயிருப்பதேயல்லாமல் மற்றொருவனுடைய பலாபலனுக்குப் போவதேயில்லை பின்னை "வேதவினோதன்" என்பவர் காட்டிய வசனங்களின் கருத்தென்ன? ஒரு பொல்லாத மனிதனுடைய புத்திரனானவன் தன் பிதாச் செய்த குற்றத்திலே யாதொரு தடையில்லாமற் கட்டாயமாய் அகப்படத்தான் வேண்டியதென்று சொல்லவில்லை பெரும்பாலும் பிதாச் செய்துவந்த குற்றத்திலே மகனும் அகப்படவேதுவாயிருக்கிறானென்று சொல்லவேண்டும். ஆகையினால் மகன் செய்த குற்றம் மகனுக்கேயுடையது. ஒரு கள்வனுடைய மகனானவன் பெரும்பாலுங் கள்வனாய் வருகிறதில்லையா? ஒரு விபசாரனுடைய மகன் பெரும்பாலும் விபசாரனாய் வருகிறதில்லையா? அப்படியிருந்தும், அந்தக் குமாரன் கள்வனாயும் விபசாரனாயும் வரும்பொழுது அவன் குற்றவாளியாவதினால் ஆக்கினைத் தண்டத்துக்கு அவனே ஏதுவாயிருப்பான் இப்படி இவனடைய வந்தது தன் பிதாப் பாவஞ் செய்ததினாலல்ல தன் பிதாவைப் போலிவனும் பாவஞ்செய்ததினால் இப்படியடையவந்ததென்று தீர்க்கவேண்டியது ஆகையினால் ஒரு பொல்லாத மனிதன் எண்ணவேண்டியதென்னவெனில் தன்னுடைய பின் சந்ததியாரும் தான் செய்துவந்த பாவத்தைப் பின்றொடர்ந்து நாடி அவர்களும் பாவஞ்செய்ய ஏதுவாயிருக்கிறதினால் தான் பாவஞ்செய்யாது விடுவதே யோக்கியம் இன்னும் பொல்லாத பெற்றோர்களுடைய பிள்ளைகள் தங்கள் பிதாமாதாவின் வழிகளை விட்டுவிடவேண்டியது ஏனென்றால் அப் பிள்ளைகள் ஆண்டவனிடத்துக்குத் திரும்பி அவருடைய கட்டளைகளுக்கமையும்போது, மெய்யாகவே தங்கள் ஆத்துமத்தைத் தப்புவித்துக்கொள்வார்கள் மேற் குறித்த காரியங்களைத் திட்டமாய் விளங்குகிறதற்கு எசேக்கியேல், ௰அ. அதிகாரத்தை வாசிக்கவேண்டியது.

முகாமைத்துரையே,

மாங்கிஷம் புசிப்பது மிகவும் அடாத காரியமென்று சைவமார்க்கத்திலுந் திருவள்ளுவர் முதலான நூல்களிலுஞ் சொல்லியிருப்பதும், கிறிஸ்துமார்க்கத்தில் புசிக்கலாமென்று சொல்லியிருப்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட காரியங்களாயிருப்பதினால் அதைப் பற்றி நான் அறிவிக்குஞ் சில கருத்துக்களைத் தயவுபண்ணி உங்கள் உதயதாரகைப் பத்திரத்தில் அச்சடிப்பிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன் நான் மச்சம் மாங்கிஷம் புசிக்கிற பிதாமாதாக்களால் வளர்க்கப்பட்டு அப்பதார்த்தங்கள் பக்குவமாய்ச் சமைக்கப்பட்டால் மரக்கறியிலும் அதிக பிரியங்கொண்டு புசித்து அதின் நன்மை தின்மை இன்னதென்று விசாரியாமல் நடந்துவந்தேன் பிறகு தமிழருடைய நூற்போக்கைக் கண்டு, மச்சம் மாங்கிஷம் புசிப்பது பாவமல்லாதிருந்தாலும் அதை விட்டு வருவோமென்றெண்ணிச் சிறிது காலம் அப்படிச் செய்தேன் ஆனாலும் கிறிஸ்துமார்க்கத்திற் சேர்ந்த பிறகு அதில் மாங்கிஷம் புசிப்பது பாவமல்லவென்று கண்டிருப்பதினால் முன்போல மச்சம் மாங்கிஷத்தைப் புசித்துவந்தேன் ஆனாலும் அப்படிச் செய்வது புசிக்குஞ் சமயமாத்திரந்தான் என் மனதுக்கு மிகவும் பொருந்தியதாயிருக்கவில்லை, ஆகையால் கிறிஸ்துமார்க்கம் மாங்கிஷந் தின்னலாமென்று சொல்லுவதுஞ் சைவமார்க்கந் தின்பது கொடிய பாவமென்று சொல்லுவதும் மிகவும் வித்தியாசமான காரியமாயிருப்பதினால் அதை விசாரிக்கத் தொடங்கினேன் என் விசாரணையில் நானறிந்து நிச்சயித்திருக்கிற காரியத்தை யாவருக்கும் அறிவிக்க விரும்புகிறேன். ஊனைப் புசித்துச் சீரணிக்கத்தக்க படைப்புக்கள் யாவும் இருவகையாயிருக்கின்றன அவையெவையெனில், மரபோசனிகளும் மாங்கிஷ போசனிகளுந்தான் இவ்விருவகைப்பட்ட படைப்புகளின் சடங்களை வெட்டிப் பிளந்து உட்கூறுபாடுகளை ஆராயுமிடத்து அவையொன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கின்றன. மாங்கிஷ போசனிகளின் அவயவங்கள் உரத்ததும் மாங்கிஷஞ்சீரணம் பண்ணத்தக்கதானதும், மரபோசனிகளின் அவயவங்கள் மென்மையானதும் நொய்மையானதுமாயிருக்கின்றன மனுஷனுடைய உள் அவயவங்களைப் பார்க்கும்பொழுது மாங்கிஷ போசனிகளின் தன்மையாயிருக்கின்றன. இதனால் நாம் அறிவதென்னவானால் பராபரன் மனுஷரைப் படைக்கிறபொழுதே மாங்கிஷபோசனிகளாயே படைத்தார் ஆகையால் மாங்கிஷம் புசிப்பது மனதுக்குப் பொருத்தமும் பழக்கமுமல்லவென்று ஒருவன் சைவ ஒழுங்கைப் பின்பற்றுவதன்றிப் பாவமென்றெண்ணி மாங்கிஷ போசனத்தைத் தள்ள நியாயங்காணாது

இப்படிக்கு — சத்தியவசனி

விலங்கியல்.

[Brief descriptions of the most remarkable Animals that inhabit the Earth illustrated by cuts on a comparative scale]

The Horse—குதிரை

குதிரைகள் எல்லாத் தேசங்களிலுமுண்டாயிருக்கின்றன. அவை



கள் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாயிருக்கிறதினாலே பற்பல சாயலுள்ளவைகளாயிருக்கின்றன. அந்தச் சாயல்களைப் பார்த்துக் குறுகியிருப்பதினாலே மானுக்கொப்பென்றும், உயரமாயிருப்பதினாலே ஒட்டகத்துக்கொப்பென்றும், ஒடுங்கியிருப்பதினாலே வெள்ளாட்டுக்கொப்பென்றும், பருத்திருப்பதினாலே மாட்டுக்கொப்பென்றுஞ் சொல்லுவார்கள். அவைகளிற் சிலவற்றிற்கு முகம் நீண்டொடுங்கினதாகவும், கூர்மையான கண்ணும் நிமிர்ந்த செவியுமுள்ளவையாயும், சிலவற்றிற்குப் பருத்த தலையாகவும், கூர்மையான பார்வையில்லாததாகவும், செவி மடிந்ததாகவும், மூக்குச் சுருங்கினதாகவும், சிலவற்றிற்கு உடம்பின் மயிர் நீளமாகவும், மெல்லிதாகவுஞ், சிலவற்றிற்கு உடம்பெங்கும் மயிர் சுருண்டதாகவும், சிலவற்றிற்கு மயிர் குறுகினதாகவுமிருக்கின்றன. அவைகளிற் சில கறுப்பாகவும், சில வெளுப்பாகவும், சில சிவப்பாகவும், சில பொன்மையாகவுஞ், சில பலவன்னமாகவுமிருக்கின்றன.

குதிரை ஒவ்வொரு தேசத்திலுஞ் சஞ்சரித்தாலும் அரபியா, துருக்கை, பாரிசா முதலான பற்பல பகுதிகளிலுள்ள குதிரைகள் மிகவும் அழகும், குணமும், பலமும் விவேகமும் எசமான் கருத்தறிந்து நடக்குந் தன்மையுமுள்ளவைகளாயுமிருக்கின்றன. இங்கிலிஷ்க்காரர் வளர்க்கிற போர்க் குதிரைகள் மிகவும் பலமுள்ளவைகளாயிருக்கின்றன. குதிரையைப் பற்றி யோப்பென்பவர் சொல்லுகிறதென்னவெனில், "குதிரைக்கு நீ வீரியத்தைக் கொடுப்பாயோ? அதின் கழுத்துக்கு நீ கனைக்குதலை உடுத்துவிப்பாயோ? பாளயமிறங்குகையில் அது வீரியமாய் அக்கழித்து ஆயுதங்களைத் தரித்தவர்களுக்கு எதிராய்ப் புறப்படும்" அது கலங்காமலும், பட்டயத்துக்குப் பின்வாங்காமலும் பயப்படுதலை நகைக்கும். அரபியர் பிரயாணம்போம்பொழுது பிரதானமாய்ப் பெட்டைக் குதிரையிலேறிப் போகிறார்கள். அரபி தேசத்திலுள்ள எழியவர்களும் ஒரு குதிரை வைத்திருப்பார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் போலக் குதிரையையுங் கூடாரத்துக்குள்ளே வைத்திருப்பார்கள். அந்தக் குதிரையை அப்படியே அவர்களுடனே பழக்கியிருக்கிறதினாலே அவர்கள் குழந்தைகள் வாலைப் பிடித்துக்கொண்டேறினாலும், செவியைப் பிடித்து முறுக்கினாலுங், கழுத்தைக் கட்டிக்கொண்டு தூங்கினாலும், மற்றுமென்ன சேஷ்டை செய்தாலும் அது அன்பாகவேயிருக்கும். ஒரு அரபியன் தன் குதிரையைப் பழக்கி அது தனக்குச் செய்யவேண்டுவதற்கெல்லாம் வேலைக்காரனோடே பேசுகிறதுபோலப் பேசியறிவித்து வருவான். அதுவும் அந்தக் குறிப்பறிந்து ஓடச் சொன்னால் ஓடும், பாயச் சொன்னாற் பாயும், நிற்கச் சொன்னால் நிற்கும் மற்றுமென்ன சொன்னாலும் அப்படியே செய்யும். குதிரையின் மேன்மையைப் பற்றிப் பயறி (Pierce) என்பவர் சொல்லுகிறதாவது, 'அரபியாவிலே எல்லாக் குதிரையிலுந் திறமான ஒரு பெண்குதிரை நின்றது. அத்தை ஒரு பிராஞ்சுக்காரன் விலைக்கு வாங்கித் தன்னூரில் இராசனுக்கு அனுப்பும்படி எண்ணி அக் குதிரைக்காரனிடத்தில் விலை கேட்டபொழுது அவன் அதற்குச் சம்மதிக்கமாட்டேனென்றுவிட்டான். பிறகு சம்மதித்து நான் கேட்கிற அவ்வளவு பணம் இந்தக் குதிரைக்குத் தருவீரோ என்று கேட்டவிடத்தில், அந்தப் பிராஞ்சுக்காரன் தன் ஊருக்கெழுதி ஒரு பொற்கட்டியெடுப்பித்துக் குதிரைக்கு விலையிதுதானென்று கொடுத்தபொழுது, அந்த அரபியன் பெருமூச்சுவிட்டுச் சொல்லுகிறான் "உன்னை (குதிரையை) நான் ஆருக்கு விற்கப் போகிறேன்! ஏரோப்பையருக்கோ! உன்னை மரத்திலிறுக்கி ஒட்டக் கட்டிச் சவுக்காலடித்து நிர்ப்பந்தப்படுத்துகிறவனெவன்! என்னுடைய அன்பே! அழகே! ஆபரணமே! என்னுடனே கூடவந்து என்னுடைய பிள்ளைகளுடனே சந்தோஷமாயிரு." இப்படியே சொல்லிக் குதிரையின்மேலேறி ஒரு நிமிஷத்திலே கண்ணுக்கெட்டாமற் போய்விட்டான்.

ஆசியா, அமெரிக்கா, ஆபிரிக்காக் கண்டங்களிற் காடுகளில் அனேகங் குதிரைகள் கூட்டங் கூட்டமாயத் திரிகின்றன, அவைகளெல்லாம் மிகவும் பலமும் உறுதியுங் கதியுமாயிருக்கிற ஒவ்வொரு குதிரை ஒவ்வொரு கூட்டத்துக்குத் தலைமையாயிருந்து நடத்துகின்றது, அந்தக் குதிரைகள் நாலு ஐந்து வருடபரியந்தம் அந்தத் தலைமையிலிருக்கும், அப்படியிருக்கையில் அதற்குப் பலவீனமாவது சோம்பலாவது உண்டாயிருக்குதென்று மற்றக் குதிரைகள் கண்டால் அவைகளிலொரு பலமுள்ள குதிரை அந்தத் தலைமையை அடைகிறதற்கு அதினோடே முட்டிப் போர்செய்யும். அ

து சயித்ததாலே அது தலைமையாகவிருக்கும் குதிரைகள் இப்படிக் கூட்டங் கூட்டமாய்ச் [illegible] தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகிறதற்கு [illegible] [illegible] இனத்திற் பிரியமாயிருக்கிறதினாலே அப்படிச் [illegible] குதிரைகள் மெத்தப் பலமும் உறுதியுமுள்ளவைகளுமாயிருந்தாலும் மற்ற மிருகங்களை யுத்தகாலத்திலே தங்களைக் காத்துக்கொள்ளும்படி யுத்தஞ்செய்கிறதேயன்றி அவைகளோடே வலிய யுத்தஞ்செய்யப்போகிறதேயில்லை. ஆசியாகண்டத்திலுள்ள குதிரை வகைகளிலும் ஐரோப்பைக்கண்டத்தில் அநேக வகையான குதிரைகளிருக்கின்றன. அந்தக் குதிரைகளிலொருவிதமான குதிரைகள் மிகவும் உயர்ந்து பருத்ததாகவும், அதின் கழுத்து மிகவும் வலுத்ததாயும், அதின் கால் தூணைப்போலப் பூதித்ததாயும், அதின் குளம்பு மெத்த விஸ்தாரமானதாயுமிருக்கிறது. பின்லாந்து தேசத்திலொருவிதமான குதிரையும், தாத்தாரிதேசத்தில் வேறுவிதமான குதிரைகளுமுண்டு.

(On Female Education)

பேதைகள் மன்றாட்டம்.

சங்கைபொருந்த முகாமைத்துரையே, இத்தேசத்திலுள்ள பெண்களின் இகபர பிரயோசனத்துக்கடுத்த மன்றாட்டத்தை உங்கள் உதயதாரகைப் பத்திரத்திற் போட்ட மன்றாடிக்கொள்ளுகிறோம். இத்தேசத்திலே அறிவிலே உயர்ந்த பெரியோரும் மற்றவர்களுங் கூடிச் சிலபெண்கள் ஆண்களைப் போல மேன்மையானவர்களும் அழியாத ஆத்துமாவையுடையவர்களுஞ் சங்கிக்கப்படத்தக்கவர்களுமாயிருக்கிறார்களென்று வழக்குச் சொல்ல அவர்களில் மற்றவர்கள் அவர்களைத் தாழ்த்திச் சிறைகளைப் போலப் பாவித்து மிருகங்களை அடிக்கிறதுபோலச் சிலர் தங்கள் மனைவிகளை அடித்தும் இகழ்ச்சியாய் நடத்தியும் வருகிறார்கள். ஆகையால் எங்களுடைய மன்றாட்டு என்னவானால், இங்கிலாந்து அமெரிக்கா தேசத்திலுள்ள நலவுபகாரிகள் இத்தேசத்துக்கு வந்து பெண்பிள்ளைகளாயிருக்கப்பட்டவர்களை மேன்மைப்படுத்தி அவர்கள் ஒழுக்கம்போல நடக்கவேண்டுமென்று போதித்துவருகிறது போல இத்தேசத்திலுள்ள பெரியோருக் தருமக் கருத்துள்ளவர்களும் இரக்கசாலிகளுமான நீங்களும், இன்னும் பெண்பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்குப் படிக்கவிடாத குலத்திலே பெரியோரென்றிருக்கிற பிராமணர் முதலானவர்களும் குருமாருக்கநுசாரிகளாகிய எங்கள் சாதியாராகிய பெண்கள் சகலரும் கல்வியறிவிலேயுஞ் சன்மார்க்கத்திலுந் தேறும்படி பள்ளிக்கூடங்களுக்குப் போய்ப் படிக்கவுங் கிறிஸ்துமார்க்கமான கோவில்களுக்குப் போய்ப் பிரசங்கங்களைக் கேட்கவும் உத்தரவு கொடுக்கக் கேட்கிறோம். கருத்தாவுந் தேவதூதரும் இராசாக்களுங் குருக்களும் உவாத்திமாரும் எங்களாத்தும நன்மைகளை விரும்ப நீங்களோ வேற்றுமையாக நில்லாதபடி மன்றாடுகிறோம். இப்படிக்கு

இயேசு அடியார்

அவதானசோதனை.

மா றி. றி முகாமைத்துரையவர்களுக்கு வந்தனம்.

மகா கனம்பொருந்திய சோடசாவதானப் புலவர்கள் ஒரு வேத வாக்கியத்தை எடுத்துச் சிற்பதிப்பித்ததனுப்பில் முன்னிருந்தபடி கோத்தனுப்புவோமென்றார்கள். ஆகையால் இதன் பின் ஓராசிரியவிருத்தத்தை எழுத்துக் கலந்தெழுதுகிறேன். அதனை முன்னிருந்தபடி சோத்தனுப்பும்படி அவர்களை வேண்டிக் கேட்கிறேன். அப்பொழுது அப்புலவர்கள் தன்மை விளங்கும். அவர்களை இகழ்ந்தவர் புன்மை துளங்கும். அதனால் அவதானத்தின் சாரத்தைக் கண்ணுவேன் அதற்குபகாரத்தைப் பண்ணுவேன். ஆதலால், உதயதாரகையிலிதைப் பதிக்கவும் உகந்து கோத்தனுப்பிறதை மதிக்கவுந் தங்களை மன்றாடிக் கேட்கிறேன்.

ஆசிரியவிருத்தம்

தேயேமானிடைந்றயிசவ நதோவெனை கபுடலத்கழுற்டுமனுலடு
புபகனைகலனவலாற பொதிவமிகிமோயாசெரசெமடபுறெ குரயத்
மகுதலகசோணதிறநணிமுதிஙைறவரிருமுஙதாடகூடைழவிழகல விா
றிமதா சமடருணமுணிழவடை வசகாறதணைதமேதயனனபபுகு
றெமுழரலைஙபசெமறனவமைகதுஙவிலபமறமடிறனட பொருாபயு
மயாறைவலணருதுவயோவேழலாவபுதேதெமகயனயமைனமகள
குபவாதாழகுசதிமாபுருதாதரளிவதசமமஞமிலலேது யவருகாதிடை
மைசிடுமெல்லசெடபொயசெசயதருகததிகாளநாகவிதுவாழ
பிடையகதநாறபகதிபொகணைகொசபாதயழுசண திரநலனகசத
வேவதசாகபயனினிசினமுததாவடுயலாமொ மகமிறுதநிக நவிலம
வோரருஞதகுகனமமைசகுதாககததமலலாலநசிதபறரு குரைகளு
விலகசககயபுறி சிதயிமுமடுளவிஞாகறபனாவகழகனா கககவெவித
மலமடிமடுபாகி லைதவவலலற னமாகமினுவில நமைகுறலைவக தி
றெவாளசிதுடிதணடருபிதிலலயுலயதடதித துனதியிவதிருபி வல
தனமுருயுளிதுவேகுளிஞலதமுதிாகுாவவடிலைகுசிபனபகலஙகயம
குதிகுமுபலகுகவகலயேவிசிதுவிதருளபூவவுயுதகிமுவிறமுகபமிகழு
தைநபுதி திருநெலவேலி இப்படிக்கு

ஆங்கீரசஉம் ஆண்டு சித்திரைமீ யகதி.

வேலாயுதா குமாரன் வைத்தியலிங்கம்

பஞ்சதந்திரக்கதை

இரண்டாவது சுக்கிரலாபதந்திரம் அல்லது நட்புப்பேறு.

கூஅம்—பக்கத்தினின்று

மகததேசத்திற் சண்பக வனத்தில் மானுங் காகமும் ஒன்றுக்கொன்று நட்பாயிருந்தது. அப்படியிருக்கையில் அந்தமான் மனதின்படி புல்லும் [illegible]லானவைகளை மேய்ந்து கொழுத்திருக்கிறதை ஒரு நரி பார்த்துத் தனக்குள்ளே ஆலோசிக்கின்றது, இவன் நமக்குச் சாத்தியமாயிருக்கிறான், ஆகையால் இவனை வஞ்சனையாற் கொல்லவேண்டுமென்றிப்படி நிச்சயித்து அதன் சமீபத்திற்போய் சிநேகிதா சுகமாவென, அதைக்கேட்டு மான் நீயாரென, நரி-நான் குத்திரபுத்தியென்கிறநரி இந்தக்காட்டிலே யாருமற்ற பாவியாகத் திரிந்துகொண்டிருந்தேன். இன்றைக்குனைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்தேன். இப்பொழுது வேலைசெய்து கொண்டு உன்னிடத்திலிருக்க விசசிக்கிறேனென, இதைக் கேட்டு மான் நல்லதென்றது பிறகு பொழுதுபோனவுடனே இரண்டுஞ் சண்பகமரத்தின்கீழே வந்தன. அம்மரத்தின் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற மானின் சிநேகிதனாகிய சுபுத்தியென்னுங் காகம் இவ்விரண்டையும் பார்த்து மானைக்கேட்கிறது, ஓ! மித்திரா, உன்னைடையிலிருக்கிறவனாரென, மான் இச்சம்புகன் என்னுடனே சிநேகித்திருப்பேனென்கிறானென, அப்போது காகம், மித்திரா, சடிதியில் வந்த வழக்கமில்லாதவனை நம்பலாகாது ஒருவன் குலமும் நடத்தையுந் தெரியாமல் அவனுக்கிடங் கொடுக்கலாகாது, கொடுத்தால் ஒரு பூனைக்குச் சாறகவனென்னுங் கழுகு இடங்கொடுத்திறந்தாற்போனேரிடுமென, அதைக்கேட்டு மான் சாறகவனெப்படிச்செத்தானென, காகஞ் சொல்லுகிறது.

பாகிரதி தீர்த்தத்திற் திரிகூடமென்னும் மலையில் ஒரு முதிய இத்திமரத்தின் பொந்தில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற நகமுங் கண்ணுமில்லாத சாறகவனென்னுங் கிழக்கழுகானது மற்றைப் பட்சிகள் தன்னிடத்தில் இரக்கம்வைத்துத் தங்கள் ஆகாரத்திற் கொஞ்சங்கொஞ்சம் நொருக்கிக்கொடுக்கத் தின்றுகொண்டு சீவித்திருக்கையில் ஒருநாள் நெடுஞ்செவியனென்னும் பூனை, பறவைகளுடைய குஞ்சுகளைத் தின்னவேண்டி அந்தமரத்தின் கீழேவர, அதைக் குஞ்சுகள் பார்த்துப் பயந்து பெருங்கூச்சலிட்டன. கழுகதைக் கேட்டு நீங்களேன் பயப்படுகிறீர்கள் இங்கே யாரவந்தானென, இதற்குள்ளே பூனை சாறகவனைப்பார்த்து, நான் செத்தேனென்ட் பயப்பட்டுடனே மனதிற் தைரியம்பண்ணிக்கொண்டு இந்தச்சத்துருவைத் தப்பித்துக்கொண்டு ஓடுகிறதற்கு நமக்குச் சக்தியில்லை ஆகையால் இவன் சமீபத்திற்போகவேண்டும் பின்னேதுவுண்டாகுமோவது உண்டாகட்டுமென்றிப்படி நிச்சயித்து அந்தக் கழுகின் கிட்டப்போய்ச் சொல்லுகிறது, சுவாமீ உனக்கு வந்தனம்பண்ணுகிறேனென, கழுகதைக்கேட்டு நீயாரென, அப்பது பூனை நெடுஞ்செவியனென்னும் பூனையென்பின்பு சாறகவன் நீ சீக்கிரமாய் இவ்விடம்விட்டு ஓடிப்போ இல்லாவிட்டாற் சாவாயென, பூனை நானென் விர்த்தாந்தத்தைச் சொல்லுகிறேன் அதைக்கேள் பிறகு கொல்லத்தக்கதானாற் கொல்லு ஏனென்றால் சாதிபேதத்தினாலேயே பிராணிகளைக் கொல்லுவதாவது பூசிப்பதாவது யோக்கியமல்ல ஆகையால் அவன் நடத்தையைப்பார்த்து ஏது செய்யத்தக்கதோ அதைச்செய்ய வேண்டுமென, கழுகிதைக் கேட்டுப் பூனையைப்பார்த்து ஆனாலும் நீயேன்வந்தாய் சொல்லென, பூனை நான் கங்காதீர்த்தத்தினித்திய ஸ்நானம்பண்ணிச் சாந்திராயணமுதலாகிய விரதங்களை ஆசரித்துக்கொண்டிருக்கிறேன் நீ மிகவுந் தருமவானாயிருக்கிறாயென்று பட்சிகளாலே எப்பொழுது

கேள்விப்படுகிறதில்லை நான் உன்னிடத்திற்கு வந்தேன். ஏனென்றால், வயதில் முதிர்ந்த வித்துவானிடத்திற் றருமங்கேட்கவேண்டுமென்று சாத்திரமிருக்கின்றது ஆனாலும் நீ தாமத்தைவிட்டு என்னைக்கொல்லத்துணிந்தாய், இப்படி இல்லறத்தாருடைய ஆசாரமெங்கும் பார்த்ததில்லை. சத்துருவும் தன்வீட்டுக்குவந்தாற் சாதுக்கள் அவனுக்குச் சம்மானம்பண்ணுவார்கள், மரந் தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல்கொடுக்கவில்லையா? மேலுஞ் சாதுக்கள் தங்கள்வீட்டுக்கு எவன் வந்தாலும் பூசிக்கிறார்கள் குறைச்சலொன்றும் பண்ணுகிறதில்லை, இதற்குக் காரணமென்னென்றால் அதிதி ஒருவனுடைய வீட்டுக்குவந்து முகம்வாடிப் போகிறானே அவன் தன் பாவத்தை அவ்வீட்டெசமானுக்குக் கொடுத்து இவன் புண்ணியத்தைக் கைக்கொண்டுபோகிறான் ஆகையாற் சாதுக்கள் எல்லாரிடத்திலுந் தயைசெய்கிறார்கள் சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான். இதைக்கேட்டுக் கழுகு சொல்லுகிறது

[இன்னும்வரும்]

PANCHA-TANTRA-KATEI.

(A Translation, &c —Continued from page 68)

In the forest Sanpagah, of Magada country, there lived a deer and crow in mutual friendship A jackal, seeing that the deer was fattening by luxurious feeding on grass and other vegetables, says to himself, "I cannot subdue this fellow I must therefore resort to some means for his destruction " The Jackal then approached the deer and saluted him

"Who art thou?" questioned the deer

The jackal replied "I am Kuttrapootty and I live a solitary life in this forest, deprived of friends and connexions, and am therefore exceedingly gratified in meeting you, and moreover I should be happy to engage in your service "

Upon this, the deer received the jackal and at sun-set took him under a Sanpagah tree But the crow Suputtey, the friend of the deer, having perched upon the tree, and seeing the two in company calls out "O friend! who is this with you? "

The deer replied, "This jackal promises to live with me in friendship "

"Ah! my friend," interrupted the crow, "you should not trust the words of a stranger whom you happen to meet, nor receive to your friendship one, with whose rank and character you are unacquainted, for if you do, you will suffer as did the eagle Satkavan when he admitted a cat into his company "

"How was this?" asked the deer, and the crow related as follows

In the hole of an old Itty-tree standing on the mount called Trigoodum by the side of the river Bhagiratty, there lived on old eagle called Satkavan, who had lost the use of his eyes and his claws He lived by the compassion of other birds who daily fed him with a small portion of what they acquired for themselves One day a cat called Nadoonchivian, with a view to devour the young of the birds, went under the tree where they were, upon which they made loud cries of alarm The eagle hearing this asked them why they were alarmed or what had disturbed them ?—In the mean time, the cat, seeing Sathkavan, was frightened nearly to death, but recovering himself pretty soon thought within himself "I have not the ability to escape this enemy I should therefore go forward toward him, come what will " He accordingly drew near the eagle and saluted him

"Who are you?" asked the eagle

"I am," said the cat, "Nedoonchevian "

"Get away from this place" said the eagle, alarmed "on peril of losing your life "

"But" said the cat, "first hear my story and then you may kill me if I deserve it Reference should be had to one's character and not to his caste, as the ground of hostility or kindness "

"But why did you come here?" said the eagle

"I use to bathe daily in the river Ganges" replied the cat, "and keep antrayanum and other feasts, but hearing that you were very charitable, I have come to you to receive instruction on charity, for the Shastrums teach that the aged and learned are wise, but you without respect to charity, intended to kill me Such treatment of strangers is unexampled amongst men Good men will entertain even their enemies Does not the tree shade from the sun the man who heweth it down? The good are always hospitable They will treat no one with unkindness If a begger, when soliciting charity, is turned out of a house in anger and contempt, his sins will cleave to that house, therefore good men are kind toward all The moon shines upon the house of the wicked as well as upon that of the good "

Hearing this, the eagle replied as follows

(To be continued)

௩ம். அதிகாரம்.

நீத்தார்பெருமை—*The Praise of Holy Men*

௨௪. உரனென்னுந் தோட்டியாறேரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர்வித்து.

பு. அறிவென்று சொல்லப்பட்ட அங்குசத்தினாலே இந்திரியங்களாகிய யானைகள் தன் தன் புலனை நாடிச் செல்லாமலே தடுத்துக் காவல் செய்பவன் எல்லா நிலங்களினும் உயர்ந்ததென்று சொல்லப்பட்ட மோட்ச பூமிக்கு ஒரு விதையாம்.

He who guides his five senses by the hook of wisdom will be a seed in the world of excellence

Dieu

As the hook rules the elephant, so he
In wisdom firm his seminal organs rules
Who hopes to flourish in the soil of heaven

Ellis

---

௨௫. ஐந்தவித்தானாற்றலகல்விசும்புளார்கோமா
னிந்திரனே சாலுங்கரி.

பு. புலன்களிலே செல்லுகிற இச்சை ஐந்தையும் அடக்கினவனுடைய வலிமைக்கு விரிந்த ஆகாயத்திலேயுள்ள தேவர்களுக்கு அரசனாகிய தேவேந்திரனே மிக்க சாட்சியாம்.

Indran himself, the king of the inhabitants of the spacious heaven, is a sufficient proof of the strength of him who has subdued his five senses.

Dieu

Let Indran say—the king who all controls
Within the expanse of heaven—how great his power
Who his five senses in subjection holds

Ellis

No IX

By means of the *mouth* aided by the *lips*, *teeth*, *tongue* and *throat*, *human beings*

Utter—To send forth a sound
Speak—To utter an articulate sound.
Say—To communicate some idea by means of words
Articulate—To utter distinct syllables and words
Pronounce—To speak or utter words rhetorically
Enunciate—To utter words distinctly
Tell—To communicate events concerning ourselves or others
Talk—To speak in familiar discourse
Converse—To convey thoughts reciprocally
Discourse—To communicate thoughts in a formal manner
Declare—To proclaim or avow some opinion or resolution
Bid—To ask, to command, to offer, to propose
Call—To utter a loud sound–To address by name
Invite—To ask a person to go to a certain place
Summon—To give private notice.

Exclaim—To utter the voice with vehemence
Relate—To bring something to the notice of others.
Repeat—To go over again what has been said.
Recite—To repeat in a formal manner
Command—To order with authority and power to control.
Rehearse—To repeat or recite by way of preparation
Announce—To publish and declare
Hoot—To cry out or shout in contempt
Halloo—To encourage with shouts
Whisper—To speak in a low voice
Name—To give an appelation to, or to mention by name
Lisp—To speak with particulation of the tongue and teeth.
Stutter—To utter or pronounce words imperfectly
Stammer—To hesitate or falter in speaking
Sing—To utter sounds with various modulations
Cry—To utter a loud voice
Scream—To cry out with a shrill voice
Shriek—To cry out sharply from terror or anguish.
Screech—To cry out harshly
Yawn—To have the mouth open involuntarily through drowsiness or dulness
Gape—To open the mouth wide through sleepiness or dulness
Eat—To take food
Sup—To take into the mouth with the lips—To take the evening meal
Drink—To take into the mouth and swallow a liquid
Sip—To take a small draught w ı the lips
Spit—To throw out saliva from the mouth

EXAMPLES—illustrating the use of the above words

His great pain caused him to *utter* a groan
A dumb man cannot *speak*
Men's reputations depend upon what others *say* of them
A child must first learn to *articulate*
Then learn to *pronounce*
If a public speaker wishes to be heard he must *enunciate* his words
He wished me to *tell* him what I thought of his speech
Good people delight to *talk* upon serious subjects
It is pleasant to *converse* with our friends,
To *discourse* on christianity is a christian minister's duty.
To *declare* our resolutions is not always wise.
He *bid* me call at his house at 8 o'clock.
He sent his servant to *call* me
I will *invite* him to dine with me
The ki g sent a messenger to *summon* the man
The intelligence caused me to *exclaim*
A traveller delights to *relate* his adventures
Teachers are obliged often to *repeat* their instructions
I heard him *recite* a Tamil poem
It is the duty of superiors to *command*
I told my pupils to *rehearse* the dialogue often
A messenger was sent to *announce* the king's death
The ıob began to *hoot* at the speaker
Soldiers *hallo* in order to encourage one another
It is impolite to *whisper* in company.
Parents always *name* their children
A mother delights to hear her infant *lisp*
It is painful to hear another *stutter*
A child must be taught not to *stammer* when speaking
Some females *sing* sweetly
A slight accident will cause a child to *cry*
When in danger, children *scream* for assistance
Violent pain commonly makes females *shriek*
The amputation of his limb compelled him to *screech*
Indolent persons often *yawn*
Fatigue causes one to *gape*
To sustain life we must *eat*
Will you *sup* with me to night?
It is not well to *drink* intoxicating liquors
When the tea is hot we must *sip* it
It is impolite to *spit* in the presence of others

வைகாசி மாதம்.

சாதியூ வைகாசி யஉந் திடீ முதல் ஆனி யஉதிடீ, வரைக்கும

E date	தமிழ்த்தேதி	வாரம	நடசத்திரம		திதி.		யோகம்		கரணம	
12	க	வி	ரோ	உஉll	து	உருlll	அ	கூl	கவு	உருlll
13	உ	வெ	மி	உகl	தி	உக	சு	சl	கர	உக
							தி	ருசl		
14	ங	ச	தி	யகூ	ச	யஅ	சு	ருஉ	வி	யஅ
15	ச	ஞா	பு	யசா	ப	யங	க	சரு	பா	யங
16	ரு	தி	பூ	யஉl	ஷ	எll	வி	ஙஎll	தை	எll
17	சு	செ	ஆ	அl	ஸ	கll	து	ஙயll	வ	கlll
					அ	ருஙlll			வி	உஎ
18	எ	ட	ம	சl	ந	சகூll	வி	உஉl	பா	உகlll
19	அ	வி	பூ	l	த	சஙlll	அ	யரு	தை	யசாll
			உ	ருசாl						
20	கூ	வெ	அ	ருஙl	ஏ	ஙஅl	வ	எlll	வ	யக
21	ய	ச	சி	ருயll	து	ஙஙll	சி	lll	ப	சா
							வி	ருஙlll		
22	யக	ஞா	சு	சஅlll	தி	உகூll	ஸ	சகூ	[illegible]	
23	யஉ	தி	வி	சஎlll	ச	உசாl	ப	சசl	வ	உசாll
24	யங	செ	அ	சஅl	0	உசll	சி	சயll	ப	உசlll
25	யச	பு	மக	சகூlll	பி	உஙlll	சி	ஙஎll	சவு	உஙlll
26	யரு	வி	மூ	ருஉll	து	உசl	சா	ஙருll	கா	உசl
27	யசா	வெ	பூ	ருசாl	தி	உசா	சு	ஙசlll	வி	உசா
28	யஎ	ச	உ	கூய	ச	உஅlll	சு	ஙசlll	பா	உஅlll
29	யஅ	ஞா	உ	கl	ப	கூஉlll	பி	ஙருlll	கவு	lll
30	யகூ	தி	தி	எl	ஷ	ஙஎl	மா	ஙஎ	கர	ரு
31	உய	செ	அ	யஙll	ஸ	சஉl	வை	ஙஅll	வி	கூlll
June										
1	உக	பு	ச	உய	அ	சஎ	வி	சய	பா	யசll
2	உஉ	வி	பூ	உசாl	ந	ருகll	பி	சகl	தை	யகl
3	உங	வெ	உ	ஙகlll	த	ருரு	ஆ	சகlll	வ	உஙl
4	உச	ச	ரே	ஙசாl	ஏ	ருஎll	சவு	சகlll	ப	உசாll
5	உரு	ஞா	அ	ஙகூlll	து	ருகூ	சோ	சயlll	சவு	உஅll
6	உசா	தி	பர	சஉ	தி	ருகூl	அ	சஅlll	கர	உகூl
7	உஎ	செ	கா	சங	ச	ருஅ	சு	ஙருlll	வி	உஅlll
8	உஅ	பு	ரோ	சஉlll	*	ருருlll	தி	ஙகlll	சது	உஎ
9	உகூ	வி	மி	சகll	பி	ருஉl	சூ	உசாlll	கி	உச
10	ஙய	வெ	தி	ஙகூll	து	சஅ	க	உகll	பா	உய
11	ஙக	ச	பு	ஙசாll	தி	சஙll	வி	யசll	தை	யருl
12	ஙஉ	ஞா	பூ	ஙங	ச	ஙஎ	து	எlll	வ	ய

ஞாயிறுகிழமைசசஙகிராநதி நாடி ருய, விஞடி உகல மிதுனரவி

காகிதப்பிரத்தியுத்தரம

"வேதாந்த சித்தாநத சமரசசிரோமணி" எனக் கையொப்ப மிடடவா தமது பெயரைத் தயவுபணணிப பிரசிததகாரனுககுத் தெரியபபடுத்துவாரா?